
**நவம்பர் – 10**

# TNPSC துளிகள்

- சிவிங்கிப் புலிகள் வளங்காப்புத் திட்டத்தின் கீழ், அடுத்த மாதம் போட்ஸ்வானாவிலிருந்து 8 சிவிங்கிப் புலிகள் இந்தியாவிற்கு கொண்டு வரப்பட்டு, குனோ தேசியப் பூங்காவில் தனிமைப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டு தேர்தலில் முன்னாள் நியூயார்க் மாநில ஆளுநர் ஆண்ட்ரூ கியூமோ மற்றும் குடியரசுக் கட்சி வேட்பாளர் கர்டிஸ் ஸ்லிவாவை தோற்கடித்து, நியூயார்க் நகர மேயர் பதவியை வென்ற முதல் இந்திய வம்சாவளி வேட்பாளர் என்ற பெருமையினை ஜோஹ்ரான் மம்தானி பெற்றுள்ளார்.
- மேகாலயாவில் உள்ள காசி சமூகத்தினர், கருவுறுதல் மற்றும் செழிப்பின் தெய்வமான கா பிலீ சின்ஷரைக் கௌரவிப்பதற்காகவும், நல்ல அறுவடைக்கு நன்றி தெரிவிப்பதற்காகவும் ஷில்லாங்கில் ஐந்து நாட்கள் அளவிலான ஷாத் நோங்க்ரெம் விழாவைக் கொண்டாடினர்.
- உத்தரப் பிரதேசத்தின் சண்டிகர் பல்கலைக்கழகம் ஆனது, இளையோர்களிடையே புதுமை மற்றும் தொழில்முனைவினை ஊக்குவிப்பதற்காக 'கேம்பஸ் டேங்க்' என்ற ஒரு தனித்துவமான தளத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மத்தியப் பிரதேசம் ஆனது, போபாலில் உள்ள இராஜா போஜ் விமான நிலையத்தில் 'பிரதமர் ஸ்ரீ வான்வழி சுற்றுலா ஹெலிகாப்டர் சேவையை' அறிமுகப்படுத்தியுள்ளது.
    - இதனால், அதன் உள்-மாநில விமானப் போக்குவரத்து இணைப்பு முன்னெடுப்பின் கீழ் ஏர் ஆம்புலன்ஸ் (வான் வழி அவசர ஊர்தி) மற்றும் ஹெலிகாப்டர் வழி சுற்றுலா சேவைகளை அறிமுகப்படுத்திய முதல் இந்திய மாநிலமாக மத்தியப் பிரதேசம் மாறியது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாடு சட்டமன்ற மசோதாக்களின் நிலை





- பல்கலைக்கழக மானியக் குழுவின் (UGC) விதிமுறைகளுக்கு முரணாகக் கண்டறியப்

பட்ட 10 மசோதாக்களை இந்தியக் குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக தமிழக ஆளுநர் ஒதுக்கியுள்ளார்.

- 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் 18 ஆம் தேதி முதல் 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 31 ஆம் தேதி வரையில், இந்த மாநிலச் சட்டமன்றத்திலிருந்து ஆளுநர் 211 மசோதாக்களைப் பெற்றார்.
- இவற்றில், 170 மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டன, 27 மசோதாக்கள் இந்தியக் குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக ஒதுக்கப்பட்டன, 4 மசோதாக்கள் அவரது கருத்துகளுடன் திருப்பி அனுப்பப்பட்டன, மேலும் 2 மசோதாக்கள் மாநில அரசால் திரும்பப் பெறப்பட்டன.
- பெறப்பட்ட மசோதாக்களில் 81% மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதாகவும், 73 மசோதாக்கள் ஒரு வாரத்திற்குள்ளும் மற்றும் 61 மசோதாக்கள் ஒரு மாதத்திற்குள்ளும் நிறைவேற்றப் பட்டதாகவும் இராஜ்பவன் தெரிவித்துள்ளது.
- சட்டமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க தாமதப்படுத்துவதாக எழுந்த குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து இந்த விளக்கம் வெளியிடப் பட்டது.

## பாடத்திட்டத்தை மறுவடிவமைப்பு செய்வதற்கான குழுக்கள்




- மாநிலத்தின் பள்ளிக் கல்விக்கான பாடத் திட்டத்தை மறுசீரமைப்பதற்காக தமிழக அரசு இரண்டு குழுக்களை அமைத்துள்ளது.
- பள்ளிக் கல்வி அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தலைமையில் ஓர் உயர் மட்ட நிபுணர் குழு செயல்படும்.
- மாநிலத் திட்டக் குழு உறுப்பினர் சுல்தான் அகமது இஸ்மாயில் தலைமையில் ஒரு பாடத் திட்ட வடிவமைப்புக் குழு செயல்படும்.

- இந்தக் குழுக்கள் 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில கல்விக் கொள்கைக்கு ஏற்ப பாடத் திட்டத்தை மறுவடிவமைப்பு செய்யும்.
- அதன் உறுப்பினர்களாக இஸ்ரோ தலைவர் V. நாராயணன், கிரிக்கெட் வீரர் இரவிச்சந்திரன் அஸ்வின் மற்றும் கர்நாடக இசைப் பாடகர் C. சௌமியா ஆகியோர் இடம் பெறுவர்.
- பாடத் திட்டம், கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டில் சீர்திருத்தங்களை உருவாக்க இரண்டு குழுக்களும் மூன்று ஆண்டுகள் பணியாற்றும்.

# தேசியச் செய்திகள்

## பொது நிறுவன வளாகங்களில் இருந்து தெருநாய்களை அகற்றுதல்




- பள்ளிகள், மருத்துவமனைகள், விளையாட்டு வளாகங்கள் மற்றும் பிற பொது நிறுவன வளாகங்களில் இருந்து தெருநாய்களை அகற்ற உச்ச நீதிமன்றம் அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுக்கு உத்தரவிட்டது.
- நாய்கள், நியமிக்கப்பட்ட காப்பிடங்களுக்கு மாற்றப்படுவதற்கு முன்னதாக, 2023 ஆம் ஆண்டு விலங்குப் பிறப்புக் கட்டுப்பாடு (ABC) விதிகளின் கீழ் கருத்தடை செய்யப்பட்டு தடுப்பூசி போடப்பட்டிருக்க வேண்டும்.
- ஒவ்வொரு நிறுவனமும் பராமரிப்பு மற்றும் கண்காணிப்புக்காக என்று ஒரு முதன்மை அதிகாரியை நியமிக்க வேண்டும் மற்றும் வேலி அல்லது பாதுகாப்பான வளாகங்களை உறுதி செய்ய வேண்டும்.
- உள்ளாட்சி அமைப்புகள், அவற்றின் அகற்றல் நடவடிக்கைகளை முடித்து அதற்கான இணக்க அறிக்கைகளை 8 வாரங்களுக்குள் சமர்ப்பிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.
- நாய்க்கடி சம்பவங்களைத் தடுப்பதும், விலங்கு நலத் தரங்களைப் பேணுவதோடு குடிமக்களின் பாதுகாப்பையும் உறுதி செய்வதுமே இந்த வழிகாட்டுதல்களின் ஒரு நோக்கமாகும்.

## வந்தே மாதரம் பாடலின் 150 ஆம் ஆண்டு நிறைவு

- இந்தியாவின் தேசியப் பாடலான வந்தே மாதரத்தின் 150 ஆம் ஆண்டு நிறைவினைக்


குறிக்கும் வகையில், ஆயுஷ் அமைச்சகம் ஆனது புது டெல்லியில் உள்ள ஆயுஷ் பவனில் ஒரு மாபெரும் பாடல் நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்தது.

- 1870 ஆம் ஆண்டுகளில் பங்கிம் சந்திர சாட்டர்ஜி அவர்களால் எழுதப்பட்ட வந்தே மாதரம் பாடலானது, 1882 ஆம் ஆண்டில் அவரது ஆனந்த மடம் புதினத்தில் வெளியிடப் பட்டது.
- இந்தப் பாடல் 1950 ஆம் ஆண்டில் இந்தியக் குடியரசின் தேசியப் பாடலாக ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- போராட்டங்கள், கூட்டங்கள் மற்றும் கூட்டங்களில் பகிரங்கமாகப் பாடப்பட்ட இந்தப் பாடல், நாடு முழுவதும் உள்ள சுதந்திரப் போராட்ட வீரர்களால் பெரும்பாலும் "வந்தே மாதரம்!" என்ற முழக்கமாகப் பயன்படுத்தப்பட்டது.
- 1896 ஆம் ஆண்டில், ரவீந்திரநாத் தாகூர் கல்கத்தாவில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் அமர்வில் வந்தே மாதரம் பாடலைப் பாடினார்.
- 1938 ஆம் ஆண்டில், ஐதராபாத் அரசாங்கம் ஆனது ஐதராபாத்-கர்நாடகா பகுதியில் வந்தே மாதரம் பாடலைப் பாடுவதைத் தடை செய்தது.
- இது குல்பர்காவின் வந்தே மாதரம் இயக்கத்தைத் தூண்டியது.




## தணிக்கை முறையில் சீர்திருத்தம் - CAG

- இந்தியத் தணிக்கை மற்றும் கணக்குத் துறையில் (IA&AD) இரண்டு புதிய பணியாளர் பிரிவுகளை உருவாக்க இந்திய தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் (CAG) அலுவலகம் ஒப்புதல் அளித்துள்ளது.
- அவை மத்திய வருவாய் தணிக்கை (CRA) பிரிவு மற்றும் மத்திய செலவின தணிக்கை (CEA) பிரிவு என அழைக்கப்படும்.
- மத்திய அரசு நிதிகளைத் தணிக்கை செய்வதில் தனது பெரும் நிபுணத்துவத்தை மேம்படுத்துவதற்காகவும், அதன் தரத்தை மேம்படுத்துவதற்காகவும் மேற் கொள்ளப் பட்ட இந்தச் சீர்திருத்தம் 2026 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வரும்.




## அய்னி விமானத் தளத்திலிருந்து வெளியேறிய இந்தியா





- தஜிகிஸ்தானில் உள்ள அய்னி விமானத் தளத்திலிருந்து இந்தியா தனது படைகளைத் திரும்பப் பெறும் நடவடிக்கையை நிறைவு செய்துள்ளது.
- இந்தியாவிற்கும் தஜிகிஸ்தானுக்கும் இடையிலான இருதரப்பு ஒப்பந்தம் தற்போது காலாவதியானதைத் தொடர்ந்து இந்த வெளியேற்றம் மேற்கொள்ளப்பட்டது.
- துஷான்பே அருகே அமைந்துள்ள அய்னி விமானத் தளம், இந்தியாவின் ஒரே வெளி நாட்டு இராணுவத் தளமாகும்.
- இந்தியா இந்தத் தளத்தை வலுப்படுத்தப்பட்ட ஓடுபாதை, எரிபொருள் கிடங்குகள் மற்றும் விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டு அமைப்புகளுடன் மேம்படுத்தியது.
- தாலிபான்கள் கையகப்படுத்திய பிறகு ஆப்கானிஸ்தானில் இருந்து இந்தியக் குடி

மக்களை வெளியேற்றுவதற்காக 2021 ஆம் ஆண்டில் இந்தத் தளம் பயன்படுத்தப் பட்டது.

- இந்த நடவடிக்கை ஆனது, மத்திய ஆசியாவில் இந்தியாவின் செயல்பாட்டு இராணுவ இருப்பை முடிவுக்குக் கொண்டுவருகிறது.

## முக்கிய உலோகங்கள் குறித்த சர்வதேச மாநாடு

- முக்கிய உலோகங்கள் குறித்த சர்வதேச மாநாடு ஆனது ஜார்க்கண்டின் ஜாம்ஷெட்பூரில் நடைபெற்றது.
- இது உலகளாவிய ஒத்துழைப்பு மற்றும் நிலையான விநியோகச் சங்கிலிகளை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பரஸ்பர மேம்பாட்டிற்கான ஒத்துழைப்பு மற்றும் வெளிப்படையான விநியோகச் சங்கிலிகளின் அவசியத்தை மாநாடு வலியுறுத்தியது.
- இந்த மாநாடு ஆனது மின்னணுவியல், பாதுகாப்புத் துறை மற்றும் விண்வெளித் தொழில்களுக்கு இன்றியமையாத லித்தியம், கோபால்ட் மற்றும் அரு மண் தனிமம் போன்ற கனிமங்கள் மீது கவனம் செலுத்தியது.




# சர்வதேசச் செய்திகள்

## கஜகஸ்தானில் ஆபிரகாம் ஒப்பந்தங்கள்

- கஜகஸ்தான் ஆபிரகாம் ஒப்பந்தங்களில் இணைய உள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் ஐக்கிய அரபு அமீரகம், பஹ்ரைன் மற்றும் மொராக்கோ ஆகிய நாடுகள் இந்த ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டதிலிருந்து, அதில் இணையும் முதல் நாடாக இது இருக்கும்.
- இஸ்ரேலுக்கும் பிரதானமான முஸ்லிம் நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை

இயல்பாக்குவதை ஆபிரகாம் ஒப்பந்தங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளன.




## ஆழ்கடல் சுரங்க ஈடுபாட்டில் ஜப்பான் மற்றும் அமெரிக்கா




- மினாமிடோரிஷிமா தீவுக்கு அருகில் ஆழ்கடல் சுரங்கத்தை உருவாக்க ஜப்பானும் அமெரிக்காவும் ஒரு கூட்டாண்மையை அறிவித்துள்ளன.
- தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்புத் துறைகளுக்கு இன்றியமையாத அருமண் வளங்களைப் பாதுகாப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஜப்பானின் பிரத்தியேகப் பொருளாதார மண்டலத்தில் (EEZ) 5,000 முதல் 6,000 மீட்டர் ஆழத்தில், 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இந்த ஆய்வு தொடங்கும்.
- சீனா தற்போது உலகின் சுத்திகரிக்கப்பட்ட அருமண் மற்றும் காந்தங்களில் சுமார் 90 சதவீதத்திற்கும் அதிகமானவற்றை உற்பத்தி செய்கிறது.
- இந்தத் திட்டமானது உலகளாவிய விநியோகச் சங்கிலிகளைப் பன்முகப் படுத்தவும்

சீன ஏற்றுமதியைச் சார்ந்திருப்பதைக் குறைக்கவும் முயல்கிறது.

### இந்தியாவின் வாழ்வாதார மாதிரி எத்தியோப்பியா




- ❖ கிராமப்புற வறுமையைக் குறைப்பதற்கும் பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கும் இந்தியாவின் தீன்தயாள் அந்த்யோதயா யோஜனா - தேசிய கிராமப்புற வாழ்வாதார திட்ட (DAY-NRLM) மாதிரியை ஏற்க எத்தியோப்பியா நாட்டு அரசு திட்டமிட்டுள்ளதாக அறிவித்துள்ளது.
- ❖ DAY-NRLM திட்டம், 2011 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு 2016 ஆம் ஆண்டில் இது மறு பெயரிடப் பட்டது.
- ❖ இது கிராமப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் இந்தியாவின் முதன்மைத் திட்டமாகும்.
- ❖ இந்தத் திட்டம் சுய உதவிக் குழுக்கள் (SHGs) மூலம் நிலையான வாழ்வாதாரங்கள், நிதி உள்ளடக்கம் மற்றும் சமூக அணிதிரட்டலை ஊக்குவிக்கிறது.
- ❖ இது இந்தியாவின் 28 மாநிலங்கள் மற்றும் 6 ஒன்றியப் பிரதேசங்களில் சுமார் 91 லட்சம் சுய உதவிக் குழுக்களில் 10 கோடிக்கும் மேற்பட்ட கிராமப்புற பெண்களை அணி திரட்டியுள்ளது.
- ❖ இந்தத் திட்டம் கடன் அணுகல், திறன் பயிற்சி மற்றும் பொருளாதாரத் தன்னிறைவை உறுதி செய்வதற்காக தொழில்முனைவு ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

## சுற்றுச்சூழல் செய்திகள்

### கஞ்சன்ஜங்காவிற்கான IUCN மதிப்பீடு

- ❖ கஞ்சன்ஜங்கா தேசியப் பூங்காவானது IUCN அமைப்பினால் "தரமானது/நல்ல" என்று மதிப்பிடப் பட்ட ஒரே இந்தியத் தளமாகும்.
- ❖ கஞ்சன்ஜங்கா உயிர்க்கோளக் காப்பகம் என்றும் அழைக்கப்படுகின்ற இந்தப் பூங்கா, 2016 ஆம் ஆண்டில் இந்தியாவின் முதல் "கலப்பு" வகை யுனெஸ்கோ உலக பாரம்பரிய

தளமாக அங்கீகரிக்கப்பட்டது.

- இந்தப் பூங்கா, துணை வெப்பமண்டலக் காடுகள் முதல் 8,586 மீட்டர் உயரம் கொண்ட உலகின் மூன்றாவது உயரமான சிகரமான கஞ்சன்ஜங்கா மலை வரையில் 1,784 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் பரவியுள்ளது.
- இதில் 280 பனிப்பாறைகள், 70க்கும் மேற்பட்ட பனிப்பாறை ஏரிகள், பனிச் சிறுத்தைகள், சிவப்பு நிறப் பாண்டாக்கள், இமயமலை வரையாடு மற்றும் 550க்கும் மேற்பட்ட பறவை இனங்கள் உள்ளன.
- லெப்சா மக்கள் மற்றும் திபெத்தியப் பௌத்தர்களுக்கு இந்தப் பூங்கா கலாச்சார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதோடு மேலும் தோலுங் போன்ற பண்டைய மடங்கள் ஆன்மீக மரபுகளைப் பாதுகாக்கின்றன.




## வெள்ளை ஐபீரிய சிவிங்கிப் பூனை



- உலகின் முதல் வெள்ளை ஐபீரிய சிவிங்கிப் பூனை தெற்கு ஸ்பெயினின் ஜெய்ன் எனுமிடத்தில் தென்பட்டது.
- சிவிங்கிப் பூனையில் நிறமியின் பகுதியளவு இழப்பை ஏற்படுத்தும் ஓர் அரிய மரபணு நிலையான லூசிசம் இருப்பதை நிபுணர்கள் உறுதிப்படுத்தினர்.
- ஐபீரிய சிவிங்கிப் பூனையின் எண்ணிக்கை 2002 ஆம் ஆண்டில் அழிவின் விளிம்பினை எட்டிய நிலையிலிருந்து 2025 ஆம் ஆண்டில் சுமார் 2,000 ஆக மீண்டுள்ளது.

## அமேசான் காடுகளின் புத்துயிர்ப்பு – கூகுள்




- கூகுள் நிறுவனமானது பிரேசிலியாவின் புத்தொழில் நிறுவனமான மொம்பாக் உடனான அதன் மிகப்பெரிய கார்பன் அகற்றும் ஒப்பந்தத்தை அறிவித்தது.
- இந்தத் திட்டம் அமேசான் மழைக் காடுகளின் தரமிழந்தப் பகுதிகளை கார்பன் டை ஆக்சைடை உறிஞ்சும் வகையில் புத்துயிர்ப் பெறச் செய்ய உள்ளது.
- இந்த ஒப்பந்தம் சுமார் 200,000 மெட்ரிக் டன் கார்பன் உமிழ்வை நன்கு ஈடு செய்யும் என்பதோடு இது 2024 ஆம் ஆண்டு சோதனைத் திட்டத்தை விட நான்கு மடங்கு அதிகம் ஆகும்.
- செயற்கை நுண்ணறிவிற்காக (AI) பயன்படுத்தப்படும் ஆற்றல் மிகுந்த தரவு மையங்களிலிருந்து வெளியேறும் உமிழ்வினை சமநிலைப்படுத்துவதை இந்த நிறுவனம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஒப்பந்தத்தின் கீழ் மொம்பாக் கூகுளின் வனவியல் கார்பன் மதிப்புகளை வழங்கும் ஒரே நிறுவனம் ஆகும்.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### EAT-Lancet ஆணைய அறிக்கை 2025




- EAT-Lancet ஆணையமானது, ஆரோக்கியமான, நிலையான மற்றும் சரியான உணவு முறைகள் குறித்த அதன் 2025 ஆம் ஆண்டு அறிக்கையை வெளியிட்டது.
- மனித ஊட்டச்சத்தைப் புவியின் நலத்துடன் இணைக்கும் புதுப்பிக்கப்பட்ட அறிவியல் ஆதாரங்களை இந்த அறிக்கை வழங்குகிறது.
- ஊட்டச்சத்துத் தேவைகளை சுற்றுச்சூழல் நிலைத்தன்மையுடன் சமநிலைப்படுத்த இது புவி நலம் சார் உணவு முறையைத் திருத்துகிறது.
- நிலப் பயன்பாடு, நீர் மற்றும் பசுமை இல்ல வாயுக்கள் போன்ற புவி எல்லைகளை கடப்பதற்கு தற்போதைய உணவு உற்பத்தி எவ்வாறு பங்களிக்கிறது என்பதை இது மதிப்பிடுகிறது.
- உணவு சார் நீதியை இந்த ஆணையம் வலியுறுத்தி, உணவு அணுகல் மற்றும் ஊட்டச்சத்து ஆகியவற்றில் உள்ள சமத்துவமின்மையை நிவர்த்தி செய்கிறது.
- ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைப்பதில் அரசாங்கங்களுக்கு வழிகாட்டுவதற்கான புதிய மாதிரித் தரவும் இதில் அடங்கும்.
- உலகளாவிய, பிராந்திய மற்றும் உள்ளூர் அமலாக்கத்திற்கான நடைமுறைக் கொள்கை செயல் திட்டங்களை இந்த அறிக்கை முன்வைக்கிறது.
- நிலையான உணவுமுறைகள் மனித ஆரோக்கியத்தையும் புவி சுற்றுச்சூழல் அமைப்புகளையும் பாதுகாக்க முடியும் என்பதை ஆணையம் எடுத்துக்காட்டுகிறது.

# மாநிலச் செய்திகள்

### இந்தியாவின் மிகப்பெரிய புவி வெப்ப ஆற்றல் முதன்மைத் திட்டம்

- எரிசக்தி திறன் சேவைகள் லிமிடெட் (EESL) நிறுவனமானது, ஆந்திரப் பிரதேசத்தில் இந்தியாவின் மிகப்பெரிய புவி வெப்ப ஆற்றல் தொழில்நுட்ப (GET) முதன்மைத் திட்டத்தை நிறுவ அங்கீகரித்துள்ளது.

- சுற்றுலாத் துறையின் கீழ் அரக்குப் பள்ளத்தாக்கு மற்றும் விசாகப்பட்டினத்தில் என இரண்டு மையங்கள் அமைக்கப்பட உள்ளன.
- புவி வெப்ப ஆற்றல் அமைப்புகள் திறம் வாய்ந்த, சுற்றுச்சூழலுக்கு உகந்த வெப்ப மாக்கல் மற்றும் குளிரூட்டலுக்கு நிலையான நிலத்தடி வெப்பநிலையைப் பயன்படுத்துகின்றன.
- அவை மின்சாரப் பயன்பாட்டைக் கிட்டத்தட்ட 50% குறைத்து பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தைக் குறைக்கலாம்.
- இந்த முதன்மைத் திட்டம் சுற்றுலா உள்கட்டமைப்பை மேம்படுத்துவதையும், இந்தியா முழுவதும் நிலையான மேம்பாட்டிற்கான ஒரு பிரதிபலிப்பு மாதிரியை உருவாக்கச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.





## சட்டக் கல்லூரிகளில் திருநர்களுக்கான இடஒதுக்கீடு – கேரளா



- அனைத்து மாநிலச் சட்டக் கல்லூரிகளிலும் திருநர் சமூக மாணாக்கர்களுக்கு இரண்டு கூடுதல் /சூப்பர்நியூமரரி இடங்களை ஒதுக்கும் கேரள அரசின் முன்மொழிவை இந்திய வழக்குரைஞர் கழகம் (BCI) அங்கீகரித்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 24 ஆம் தேதியன்று வெளியிடப்பட்ட கேரள உயர்நீதி மன்ற உத்தரவைத் தொடர்ந்து இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது.
- கேரள அரசானது, 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 06 ஆம் தேதியன்று மூன்று ஆண்டு மற்றும் ஐந்து ஆண்டு LLB படிப்புகளுக்கு இந்த நடவடிக்கையை அறிமுகப்படுத்த முன் மொழிந்தது.
- 2025 ஆம் ஆண்டு கேரள சட்ட நுழைவுத் தேர்வில் (KLEE) தகுதி பெற்ற ஒரு திருநர் தேர்வாளர் இந்த வழக்கினைத் தொடுத்தார், ஆனால் அவருக்கு அனுமதி மறுக்கப் பட்டது.
- இந்த ஒப்புதல் உச்ச நீதிமன்றத்தின் NALSA தீர்ப்பு (2014) மற்றும் திருநர்கள் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டம், 2019 ஆகியவற்றுடன் ஒத்துப்போகிறது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### நான்சி பெலோசி ஓய்வு




- முன்னாள் அமெரிக்க அவை சபாநாயகர் நான்சி பெலோசி காங்கிரஸிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.
- பெலோசி முதன்முதலில் 1987 ஆம் ஆண்டில் காங்கிரசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதோடு மேலும் 2007 ஆம் ஆண்டில் அவையின் முதல் பெண் சபாநாயகர் என்ற ஒரு வரலாற்றையும் உருவாக்கினார்.
- ஜனநாயகக் கட்சியின் உறுப்பினரான இவர், காங்கிரசின் இரு அவைகளிலும் ஒரு பெரிய அரசியல் கட்சியை வழி நடத்திய முதல் பெண்மணி ஆவார்.
- அவர் கிட்டத்தட்ட 40 ஆண்டுகளாக சான் பிரான்சிஸ்கோவின் பிரதிநிதியாக இருந்தார்.


# முக்கிய தினங்கள்

### தேசியப் புற்றுநோய் விழிப்புணர்வு தினம் 2025 - நவம்பர் 07

- இந்த நாளின் நோக்கம் ஆனது பொது விழிப்புணர்வு, ஆரம்பகால நோயறிதல் மற்றும்

சரியான நேரத்தில் சிகிச்சை மூலம் புற்றுநோயின் பாதிப்பைக் குறைப்பதாகும்.

- மேரி கியூரியின் பிறந்த நாளை நினைவுகூரும் வகையில் இந்தத் தேதி தேர்வு செய்யப் பட்டு முதன்முதலில் 2014 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது.
- இந்தியாவில், சுமார் 20 முதல் 25 லட்சம் பேர் புற்றுநோய் பாதிப்புடன் வாழ்கின்றனர் என்பதோடு இங்கு ஒவ்வோர் ஆண்டும் கிட்டத்தட்ட சுமார் 7 லட்சம் புதிய பாதிப்புகள் பதிவாகின்றன.
- இந்தியாவில் உள்ள மொத்தப் புற்றுநோய்களில் சுமார் 34 சதவீதப் பாதிப்புகளுக்கு புகையிலை பயன்பாடு காரணமாக உள்ளது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★